# WS 1 for Academic year (2026 - 2027)

**Grade : 7**

**Subject: Tamil ( தமிழ் )**

**Date** _______________

I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) ‘குரலாகும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………..
அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும் இ) குர + லாகும் ஈ) குர + ஆகும்
2) வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ……………..
அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானலி
3) ‘நெறி’ என்னும் சொல்லின் பொருள் …………………..
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்
4) வானில் …………….._கூட்டம் திரண்டால் மழை பொழியும்
அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்
5) பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் …………..
அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி
6) ‘தந்துதவும்’ என்னும் சொல்லைப் பார்த்து எழுதக்கிடைப்பது ……………..
அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும் இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும்
7) ‘இரண்டல்ல’ என்னும் சொல்லைப் பார்த்து எழுதக்கிடைப்பது ……………..
அ) இரண்டு + டல்ல. ஆ) இரண் + அல்ல. இ) இரண்டு + இல்ல. ஈ) இரண்டு + அல்ல
8) ஒப்புமை+ இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது
அ) ஒப்புமை இல்லாத ஆ) ஒப்பில்லாத இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத
9) ஒலியின் வரிவடிவம் …………… ஆகும்.
அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு
10) பேச்சுமொழியை …………………… என்றும் கூறுவர்
அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி
11) மொழியின் முதல்நிலை பேசுதல் ………………….. ஆகியனவாகும்.
அ) படித்தல். ஆ) கேட்டல். இ) எழுதுதல். ஈ) வரைதல்
12) தமிழின் கிளைமொழிகளில் ஒன்று …………………
அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்
13) ‘காடெல்லாம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………………
அ) காடு + டெல்லாம் ஆ) காடு + எல்லாம் இ) கா + டெல்லாம் ஈ) கான் + எல்லாம்
14) வாழை, கன்றை …………………..
அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது
15) ‘கிழங்கு + எடுக்கும்’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ………………
அ) கிழங்கு எடுக்கும் ஆ) கிழங்கெடுக்கும் இ) கிழங்குடுக்கும் ஈ) கிழங்கொடுக்கும்
16) ‘சுட்ட பழங்கள்’ என்று குறிப்பிடப்படுபவை ……………….
அ) ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள். இ) வேகவைத்த பழங்கள். ஈ) சுடப்பட்ட பழங்கள்
17) ‘மனமில்லை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ……………
அ) மன + மில்லை. ஆ) மனமி + இல்லை. இ) மனம் + மில்லை. ஈ) மனம் + இல்லை
18) ‘பெயரறியா’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ………………..
அ) பெயர் + றியா. ஆ) பெயர் + ரறியா. இ) பெயர் + அறியா. ஈ) பெயர் + அறியா
19) நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது …………………
அ) பச்சை இலை. ஆ) கோலிக்குண்டு. இ) பச்சைக்காய். ஈ) செங்காய்
20) ‘நேற்று + இரவு’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ………………..
அ) நேற்று இரவு. ஆ) நேற்றிரவு. இ) நேற்றுரவு. ஈ) நேற்இரவு

II) பொருள் தருக:
1) அற்புதம்
2) உபகாரி
3) ஒப்புமை
4) முகில்
5) கொம்பு
6) களித்திட
7) ஈன்று
8) விடுதி
9) நச்சரவம்
10) அதிமதுரம்

III) பொருத்துக.
1) விரதம் – அ) வழி
2) நெறி – ஆ) நோன்பு
3) குறி – இ) தருகின்ற
4) பொழிகிற – ஈ) குறிக்கோள்

5) பகைவரை வென்றதைப் பாடுவது - அ) பரிபாடல்
6) இசைப்பாடல் - ஆ) பரணி
7) வான்புகழ் கொண்டது - இ) சங்க இலக்கியங்கள்
8) அகம், புறம் மெய்ப்பொருளாகக் கொண்டது - ஈ) திருக்குறள்
9) பரவசம் - அ) துக்கம் விசாரித்தல்
10) துஷ்டி கேட்டல் - ஆ) விரவி
11) பரவி - இ) எல்லை
12) கோடி - ஈ) மகிழ்ச்சிப்பெருக்கு

IV) கோடிட்ட இடங்களை நிரப்புக
1) உலகமொழிகளில் தொன்மையானது .....................
2) தமிகத்தின் முதல் அரசவைக் கவிஞர் ...............
3) எங்கள் தமிழ்மொழி ..................போன்ற மொழியாகும்

4) நம் அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். ......................
5) ஒன்றல்ல இரண்டல்ல பாடலின் ஆசிரியர் ........................
6) தமிழ்நாடு நிலவளமும் நீர்வளமும் மட்டுமின்றி ........................ வளமும் ........................ வளமும் நிரம்பியது.
7) தமிழக மன்னர்களும் வள்ளல்களும் ...................... மிக்கவர்களாக விளங்கினர்.
8) 'கவிச்சொல்லுக்கு' என்ற சொல்லில் 'கவி' என்பதன் பொருள் ..........................

9) முல்லைக்குத் தேர் கொடுத்தான் ..........................
10) நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணிமகுடங்களே ..........................
11) ................. பற்றிய நினைவுகள் பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களுக்குள் புதைந்து கிடக்கின்றன.
12) ................... - பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும்.
13) தங்கைகள் தங்கள் அக்காக்களுக்காகக் கையில் பெட்டியுடன் ........................ பொறுக்குகின்றனர்
14) குன்றுகளின் நடுவே மாமலை போல நின்றது. .....................

V) சரியா தவறா என எழுதுக.
1) மொழி காலத்திற்கேற்ப மாறுகிறது.
2) எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது.
3) பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி.
4) எழுத்துமொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம்.
5) பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத் தாழ்வு அவசியம்.

VI) பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.
1) பசு, விடு, ஆறு, கரு
2) பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து
3) ஆறு , மாசு, பாகு, அது
4) அரசு, எய்து, மூழ்கு,மார்பு
5) பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு

VII) தொகைச் சொற்களை விரித்து எழுதுக.
1) இருதிணை
2) முக்கனி
3) முத்தமிழ்
4) நாற்றிசை
5) ஐவகைநிலம்
6) அறுசுவை

VIII) இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.
1) அரசுக்கு தவறாமல் __________ செலுத்த வேண்டும்.
ஏட்டில் எழுதுவது ____________வடிவம்.
2) மழலை பேசும் _________ அழகு.
இனிமைத் தமிழ் _________ எமது.
3) அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை __________ பழகும்.
அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்குமொழி _________.
4) உழவர்கள் நாற்று __________ வயலுக்குச் சென்றனர்.
குழந்தை மெதுவாக __________ என்போம்.
5) நீ அறிந்ததைப் பிறருக்குச் ___________.
எழுத்துக்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது __________.
6) நீதி மன்றத்தில் கொடுப்பது __________.
'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு __________.

IX) மொழிபெயர்ப்பு:

1) Media
2) Linguistics
3) Phonology
4) Journalism
5) Magazine
6) Puppetry

7) Orthography
8) Dialogue

X) குறுவினா

1) தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
2) தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
3) நாமக்கல் கவிஞரின் பன்முகத் தன்மையினை எழுதுக.
4) நாமக்கல் கவிஞரின் படைப்புகள் சிலவற்றைக் கூறுக.
5) 'ஒன்றல்ல இரண்டல்ல' – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.
6) தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
7) தமிழ்நாட்டிலுள்ள வளங்கள் யாவை?
8) தமிழ்மொழியிலுள்ள வளங்கள் யாவை?
9) பேச்சுமொழி என்றால் என்ன?
10) மொழின் இருவடிவங்கள் யாவை?
11) வட்டாரமொழி எனப்படுவது யாது?
12) 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.
13) குற்றியலிகரம் என்றால் என்ன?
14) காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?
15) காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?
16) சிறுவர்களுக்கு நாவல் பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
17) நாவல் மரம் எத்தனை தலைமுறையாக அங்கு நின்றிருந்தது?

18) சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி பொங்கக் காரணம் யாது?
19) தங்கைகள் யாருக்காக நாவல் பழம் பொறுக்குகின்றனர்?
20) இரவு நேரத்தில் நாவல்மரத்தை நோக்கிப் படைஎடுத்தது எது? ஏன்?

XI) சிறுவினா
1) எங்கள் தமிழ் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

2) தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
3) பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விளக்குக.
4) கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?
5) 'காடு' பாட்லில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.

X) அவ்விய எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக
ஏதிலார் என முடியும் திருக்குறளை எழுதுக